திருநெல்வேலி களக்காடு முண்டந்துற்ற புலிகள் காப்பகம்
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திருமதி.இரா.பத்மாவதி, இவப,
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்(முகூபொ)

செ.மு.ஆ.எண்.ப3/2589/2023 நாள்.31.03.2023

பொருள் பணி-கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கே.பழனி, வனக்காப்பாளரின் வாரிசுதாரரான திரு.ப.பாலமுருகன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது- பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்-தொடர்பாக.

பார்வை
1) அரசு ஆணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யு.1)துறை நாள்.23.01.2020.
2) அரசு ஆணை(நிலை)எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யு.1)துறை நாள்.02.03.2016.
3) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை கடித எண்.ண2/20132/2009 நாள்.23.11.2011.
4) வனப்பாதுகாவலர், தர்மபுரி செயல்முறை ஆணை எண்.பொ1/13399/2011 நாள்.28.11.2011.
5) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.ண1/6385/2012 நாள்.31.07.2012.
6) வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திருநெல்வேலி பணி ஆணை எண்.139/2022 நாள்.26.12.2022.

***

பார்வை (3)&(4)-ல் காணும் உத்தரவுப்படி காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கே.பழனி, வனக்காப்பாளரின் வாரிசுதாரரான திரு.ப.பாலமுருகன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு தர்மபுரி கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளராக 06.01.2012 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்த நிலையில் பார்வை (5)-ல் காணும் கடிதத்தின்படி தர்மபுரி கோட்டத்திலிருந்து களக்காடு கோட்டத்திற்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டு 17.09.2012 தேதியில் களக்காடு கோட்டத்தில் பணியில் சேர்ந்து கொண்டார்.

இந்நிலையில் தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு)விதி 17(b)பிரிவின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு துணை இயக்குநர் மற்றும் வன உயிரினக்காப்பாளர், களக்காடு செயல்முறை ஆணை எண். ப/726/2013 நாள்.31.08.2013 படி திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளரை **"பணிமுடிப்பு"** (Terminated from Service as measure of punishment) செய்து ஆணையிடப்பட்டது. அதனை எதிர்த்து தனியர் அரசுக்கு மேல்முறையீடு செய்ததில் அரசாணை (டி) எண்.59 சுற்றுச்சூழல் - வனத்(வனம்.12)துறை நாள்.17.02.2021ன்படி மேற்படி தண்டனையான பணிமுடிப்பு-னை விலக்கிக்கொள்ளப்பட்டு **"மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தம்"** செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்)

சட்டம் 2016 பிரிவு 30ல் வரையறுக்கப்பட்டுள்ள்வாறு தகுதிகாண் பருவத்திற்குள்ளாக தேர்ச்சி பெற வேண்டி தேர்வு / பயிற்சி ஆகியவற்றை தனியர் நிறைவு செய்த பின்னர் இரண்டாம் ஆண்டு மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை வழங்க வேண்டி நேர்வில், "மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தம்" எனும் தண்டனையை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. பின்னர் மீண்டும் களக்காடு கோட்டத்தில் 29.06.2021 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

மேலும் பார்வை (6)-ல் காணும் பணி ஆணையின்படி தற்போது வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் அலுவலகம், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திருநெல்வேலியில் பணியிட மாறுதல் செய்யப்பட்டு 02.01.2023 தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

1) காலம் சென்ற அரசு ஊழியர் திரு.கே.பழனி, வனக்காப்பாளர் இறந்த நாள்.22.04.1998.
2) திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணிகேட்டு விண்ணப்பித்த நாள்.22.02.2001.(மூன்று ஆண்டுகளுக்குள் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.)
3) திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி கேட்டு விண்ணப்பிக்கும் போது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.
4) திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் பிறந்த நாள்.30.05.1981.(கருணை அடிப்படையில் பணி கேட்டு விண்ணப்பிக்கும் போது 18 வயது பூர்த்தி அடைந்துள்ளார்)
5) திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி கேட்டு விண்ணப்பிக்கும் போது (22.02.2001) இளநிலை உதவியாளர் பணி கேட்டு விண்ணப்பித்துள்ளார்.
6) திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் பணியில் சேரும் போது வயது 31.

ஆகவே மேற்கண்ட விபரங்களை பரிசீலனை செய்கையில் எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படவில்லை. எனவே திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளருக்கு பார்வை (2)-ல் காணும் அரசு ஆணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு.1)துறை நாள்.02.03.2016-ல் பத்தி எண்.(6.1)மற்றும் (6.2)-ன்படி அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் மூன்று ஆண்டு கால தொடர் பணிக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் | 06.01.2012 முற்பகல் | 06.01.2012 முற்பகல் | 06.01.2012 முற்பகல் |

வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்
களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்,
திருநெல்வேலி

பெறுநர்

திரு.ப.பாலமுருகன், இளநிலை உதவியாளர் (நேரில்)

நகல்: பணிப்பதிவேடு

நகல்: செயல்முறை ஆணைக்கோப்பிற்கு

நகல்: உதிரி -1